Subscription Rs 1 50
Postage to Ceylon & India 50
do Straits 75

THE

# Hindu Organ

Advertising charges per line
do per half col Rs 3 00
do per Column 5 00

VOL X. } JAFFNA, WEDNESDAY NOVEMBR 16, 1898 { இந்துசாதனம். } கலியுகஅப்தம் ௫000. { NO. 7
௧0-ம் புத்தகம் } [illegible] { இல ௭

PUBLISHED EVERY OTHER WEDNESDAY. மாதத்துக்கொருமுறை புதன்கிழமைகளிற் பிரசுரிக்கப்படும்.

## NOTICE

Clerical Examination—It is hereby notified that candidates for the Clerical Examination at the Jaffna Centre taking up the optional subjects of Interpretation and Shorthand will be examined at Jaffna

J. B CULL
D P. I

Office of the Director
of Public Instruction
Colombo, November 10, 1898.

## GIANT'S TANK WORKS.

Earthwork contracts, in connection with the above works near Murungan, will be given shortly. For rates and other particulars please apply to:—

N. S. CHAPMAN
Murungan
Mannar.

## IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDER NISI

Testamentary } No, 920
Jurisdiction }

In the Matter of the Last Will of the late Annamalai Chettiar Arunasalam Chettiar alias Ravenna Mana Meyna Arunasalam Chettiar of Vannarponnai
Deceased.

Between

Ravenna Mana Meyna Palaniappa Chetty of Vannarponnai
Petitioner.

And

Ravenna Mana Mena Raman Cheddy of Vannarponnai
Respondent.

This matter of the Petition of the abovenamed Petitioner Ravenna Mana Meyna Palaniappa Cheddy of Vannarponnai praying for grant of Letters of Administration with copy of the Last Will of the late Annamalai Chetty Arunasalam Cheddy alias Ravanna Mana Meyna Arunasalam Cheddy coming on for disposal before C. Eardley-Wilmot, Esquire, District Judge, on the 26th day of October 1898 in the presence of Messrs Casippillai and Cathiravelu Proctors on the part of the Petitioner and the affidavit of the Petitioner and of the witnesses to the Last Will which are dated the 12th day of August and the 26th day of October 1898 respectively having been read: It is ordered that the will af the late Annamalai Cheddiar Arunasalam Cheddiar alias Ravanna Mane Meyna Arunasalam Cheddiar dated the 12th day of May 1896 now deposited in this court be and the same is hereby declared proved unless the abovenamed Respondent or any other person shall on or before the 5th day of December 1898 show sufficient cause to the satisfaction of this court to the contrary.

It is further declared that the Petitioner is agent of one of the Executors named in the said Will and that he is entitled to have Letters of Administration to the estate of the said Annamalai Cheddiyar Arunasalam Cheddiar alias Ravanna Mana Meyna Arunasalam Cheddiar with copy of the said Will annexed issued to him accordingly.

The 26th day of } Signed/ C. EARDLEY WILMOT
October 1898 } District Judge.

## IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDER NISI

Testamentary } No 931
Jurisdiction }

In the Matter of the Estate of the late Sithamparam widow of Charavanai of Manthuvil
Intestate.

Valayutar Malavarayar of Meesalai
Petitioner.

Vs

1. Kantar Katiramar and wife
2. Sathuppillai both of Meesalai
3. Vyravanatar Arumugam and
4. wife Mulaikudy both of Manthuvil

Respondents.

This matter of the Petition of Valayutar Malavarayar of Meesalai praying for Letters of Administration to the estate of the abovenamed Intestate Sithamparam widow of Charavanai of Manthuvil coming on for disposal before C. Eardley Wilmot Esquire, District Judge, on the 24th day of October 1898 in the presence of Mr. S. Kandayya Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated 21st October 1898 having been read, it is declared that the Petitioner is related to the intestate as nephew and is entitled to have Letters of Administration to the estate of the said intestate issued to him unless the Respondents or any other person shall on or before the 15th day of December 1898 show cause to the satisfaction of this Court to the contrary.

This 24th day of October 1898

C. EARDLEY WILMOT
District Judge.

# THE HINDU ORGAN.

JAFFNA, WEDNESDAY NOVEMBER 16, 1898

## *FLOOD OUTLETS FOR JAFFNA.*

The rains of the 3rd Instant must awaken the Government to a sense of the duty it owes to the inhabitants of the Town of Jaffna to provide a system of flood outlets. In the absence of a Local Board to look after the drainage and sanitation of the Town, it is incumbent on the central Government to initiate and carry out every measure necessary for the improvement of the Town and the preservation of the health[illegible]he people. If the rains of 3rd November attest anything, they attest the fact that the Government, which retains the administration of the affairs of the Town in it own hands, has not discharged its duty to the inhabitants. Whether the Government ought to have handed over the management of the affairs of the Town to a Local Board of Health and Improvement is a question which can be discussed from different standpoints. There are influential and leading gentlemen in favour of the establishment of a Local Board as there are others equally influential and intelligent against it. But so long as the central Government, in spite of the multifarious duties it has to perform in administering the whole province, prefers to retain the administration of the affairs of the Town and the Gravets in its own hands, the Government should not shirk the duty of building a system of suitable drainage or relegate it to incompetent hands.

On the 3rd Instant, it rained incessantly and heavily for about twelve hours from 1 A. M to 1 P. M, and almost all the gardens and compounds in the Town and Suburbs of Jaffna were flooded to overflowing. The walls of even some well-built houses cracked and gave way. The huts and temporary sheds which afforded habitation to the coolies and poor folk of Jaffna were literally flooded, and it was a pitiable sight to see many a poor man, woman, and child get out with all their belongings from their humble abodes and take shelter in high or raised compounds and well-built houses. Fortunately, most of the rains fell after sunrise, otherwise, judging by subsequent results, there would have been many accidents, and even deaths. Several roads had to be cut across to let out the water from dwelling lands, and the roads were impassable for traffic at many places. Men of business were prevented from using their carriages to go to their offices on account of some roads having been cut open, and others flooded. Most of the culverts now in existence are built at wrong points and without reference to the level of the gardens and compounds they are intended to serve. In some parts of the Suburbs, to let out the water from the compounds lying adjacent to the culverts even, the roads had to be cut open. A few of the existing culverts are absolutely useless. Who selected the sites for the culverts, whether professional men or unprofessional men, we have no means of knowing, if the former, the position of the culverts does not show to advantage their skill in levelling and surveying. The water remained in many dwelling compounds for about five, six, and even seven days after the rains had ceased, and even the floor of some well-planned and well-built houses has become damp. The sides of the roads were overgrown with grass and bushes, and impeded the flow of water If the drains had been properly deepened with due regard to the height of the ground where the culverts are built, the rain water could have been led from the compounds to the culverts along the drains without cutting the roads and lanes across, but that had not been done In short, to tell the plain truth, nothing had been done by the Government to meet the contingency of a heavy rain or flood, and the people of the Town and Gravets of Jaffna, rich and poor, had to suffer much by the rains.

We are not aware how the Rs 4000 annually voted by the Government for the cleansing and improvement of the Town of Jaffna are spent and by whom. It is believed that the amount is handed over to a Board of Health created under an old Ordinance which for all practical purposes, has become obsolete in all the important centres of population in Ceylon except Jaffna Whoever the responsible authorities may be, whether the Public Works Department, the Government Agent, or the Board of Health, there is no denying the fact that Jaffna is not provided with a proper system of drainage, and that, consequently, fever in an epidemical form and other diseases result, at the close of the wet season, from the people breathing malaria emanating from substances rotting in stagnant water.

## THE OPENING OF THE SESSION OF THE LEGISLATIVE COUNCIL FOR 1893.

The Session of the Legislative Council for 1897 was closed in October last, and the Session for the current year opened on the 7th Instant. The address delivered by His Excellency the Governor on opening the present Session deals exhaustively with almost every question of revenue or administrative importance in the Colony. Dealing with the revenue of 1897 His Excellency congratulates the Colony on the realization of the hope entertained last year that the revenue of 1897 would exceed that of 1896. The increase during 1897 occurred in every branch of the revenue with the exception of the Sale of Government Property, and the increase was not due to any increased taxation or unexpected windfall, but to the general prosperity of the Island. The expenditure for 1897 was Rs 22,840,379. The surplus in the hands of Government for that year amounted to Rs. 2,372,144 As to the current year, His Excellency hopes that the estimated revenue will be largely exceeded. The first nine months of the year show in increase of nearly a million rupees over the estimated revenue for that period. His Excellency anticipates a

(continued on the 4th page)

உ

கணபதிதுணை

வாழ்கவந்தணர்வானவரானினம்...... ...... ....
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக.............
ஆழ்கதீயதெல்லாமரனாமமே...... ...... .......
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே.......... ........

# விளம்பரம்.

தமிழ்ச்சங்கத்தார் ஏற்படுத்திய பரீக்ஷைகளிற் பரீக்ஷிக்கப்பட விரும்புவோர் விண்ணப்பங்களை விளம்பிஞூ கார்த்திகைமீ உஅ-உ க்கு முன் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவைக்க.

மா. வைத்தியலிங்கர்
காரியதரிசி.

அறிவித்தல்.

இராட்சதகுளம் அல்லது கட்டுக்கரை.

மேற்சொல்லப்பட்ட குளத்தைச் சேர்ந்த மண்வேலை மன்னாரிலிருந்து பதினாலாங் கட்டை முருக்கனெனுமிடத்துக்குச் சமீபமாய் ஒப்பந்தமாக இன்னுஞ் சிலநாட்களில் கொடுக்கப்படும். இவ் வேலையின் விபரங்களை அறிய விருப்பமானவர்கள் இதன்கீழ் கையொப்பமிடுபவரிடம் அறிந்து கொள்ளலாம்.

டி. எச். சப்மென்
முருக்கன்
மன்னார்.

விளம்பரம்.

சகலரும் அறியவேண்டியது. ௧அ௯௩ம் ஆண்டு ஆகஷ்டுமீ ௩௩ம் திகதியைக்கொண்ட இப் பத்திரிகையாயிலாக அடுத்தடுத்து; சி. சுப்பிரமணியம், க. காசிநாதன் என்னும் இருவர்களும் வெளிப்படுத்திய விளம்பரம் முழுதும் அபத்தமும் பொய்யுமுள்ளது. எங்களில், ச. அருணாசலம் பள்ளிக்கூடவிருத்திக்குப் பணஞ் சேகரித்துப் பள்ளிக்கூடத்துக்கே செலவுசெய்திருக்கிறது. சொப்பாவிப்புக்கு எடுக்கவில்லை. க. காசிநாதன் நியாசதாரியல்ல இரண்டு நியாசதாரிகளாகிய எங்களுடைய சம்மதியின்றி, சி. சுப்பிரமணியம், ஆ. அம்பலவாணரை நியாசதாரியாக நியமிக்க யாதொரு அதிகாரமும் உரித்தும் இல்லையென்பதே.

௯-11-93. } இங்ஙனம்
காரை, கா. சிவசிதம்பரஐயர்
ச. அருணாசலம்
க. ம. வி. நியாசதாரிகள்.

# இந்துசாதனம்.

## சட்டநிருபணசபையும் தேசாதிபதியவர்களும்.

சென்ற எம் தேதி புதன்கிழமை கூடிய வருடாரம்பச் சட்டநிருபணசபையில் தேசாதிபதியவர்கள் விடுத்த நிருபம் மிகவும் விசேஷமானது. ஒவ்வொருவிஷயத்தையும் தேசாதிபதியவர்கள் நன்கு ஆராய்ந்து கற்றிருக்கின்றனரென்பது இந் நிருபத்தால் இனிது விளங்குகின்றது. அரசிறை வரும்படி வரவு செலவைப்பற்றி முன் பேசிப் பின் இத் தேச வியாபார நிலையைப்பற்றியும், புதிதாய்த் திறக்கவேண்டிய றெயிற் பாதைகளைக்குறித்தும், வரிகளைக்குறித்தும், இன்னுமிவைபோன்ற பல விஷயங்களைக் குறித்தும் பேசியிருக்கின்றனர். சென்ற நாலுவருடங்களாக ஒவ்வொருவருடமும் சராசரி ஒன்றரைலட்சம் ரூபா அரசிறை வரும்படியில் மிஞ்சிவருகின்றது. வருகிற வருடத்திலும் இத்தொகை மிஞ்சுமென்பது தேசாதிபதியவர்கள் நம்பிக்கை. ஆகவே இவ்விலங்கையரசின் பணநிலை மிகவும் திருப்திகரமானதென்பது சொல்லவேண்டியதில்லை. இத்தேச வியாபாரநிலையைக்குறித்துப் பேசியபோது தென்னமரச்செய்கை இத்தேசத்தில் இப்பொழுதுவரவர அதிகப்பட்டுவரினும் வடமேன் மாகாணத்திலும், கீழ்மாகாணத்திலும் இதற்கேற்ற நிலங்கள் அநேகமுளவென்றும், ஐரோப்பியர் இப் பிரயோசனமான செய்கையை அதிகமாகக் கைவிடாதிருப்பது விசனத்துக்கிடமாயிருக்கிறதென்றும் பேசியிருக்கின்றனர். ௧அ௯௨ம் ஆண்டில் ௧௩௦ லட்சம் ரூபா பெறுமதியான தேங்காய்கள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி பண்ணப்பட்டிருக்கின்றன. உள்ளூரிற் செலவழிந்த தேங்காய்கள் ஏறக்குறைய இரண்டுகோடி ரூபா பெறுமதியுள்ளனவாம். தென்னமரச்செய்கை மிகவும் இலகுவாகவும் மலிவாகவும்நடத்தக்கூடியதென்றும், அதனால் ஒருபோதும் நட்டம் வராதென்றும் சொல்லியிருக்கின்றனர்.

யாழ்ப்பாண றெயில்வே விஷயமாகத் தேசாதிபதியவர்கள் சொல்லியது யாழ்ப்பாணவாசிகளாகிய எமக்கு மிகுந்த அக்களிப்பைக் கொடுக்கத்தக்கது. காலியையும் கொழும்பையும் வம்பாய் சென்னை கல்குத்தா முதலியவிடங்களோடு இணைக்கக்கூடியது இவ்வியாழ்ப்பாண றெயில்வேயேயென்றும், இந்திய அரசாட்சியார் பாம்பன் வரையில் தங்கள் றெயிற்பாதையைக் கொண்டுவந்துவிடப் பிரயாசப்படும்போது நாங்கள் இவ்விரு தேசங்களையும் இணைக்கக்கூடிய இப்பாதையை அசட்டைபண்ணிவிடுதல் தகாதென்றும், ஆபிரிக்காமுதலிய காட்டுத் தேசங்களிலும் றெயிற் பாதைகள் திறக்கப்பட்டிருக்க, சிறந்த நாடாகும் யாழ்ப்பாணத்திற்கு றெயிற்பாதை திறந்து அங்கு மிதமிஞ்சியிருக்குங் குடிசனங்களை வன்னிநாட்டிற் குடியேறப்பண்ணி அவ் வன்னிநாட்டை முந்திய நன்னிலைக்குக் கொண்டுவராதிருத்தல் சரியல்லவென்றும் பேசினர். யாழ்ப்பாணம் றெயிற்பாதை மதவாச்சிக்கூடாக யாழ்ப்பாணத்திற்கும் மதவாச்சியிலிருந்து மன்னாருக்குந் திறக்கப்படும். இந்த றெயில்வே திறந்துமுடிந்தவுடனதை யிற்றினை செலவைக் கட்டக்கூடிய வரும்படியையுமென்பது தேசாதிபதியவர்கள் நம்பிக்கை.

அரசிறை வரும்படி மிதமிஞ்சி அதிகப்பட்டு அரசாட்சியார் பொக்கிஷசாலையானது நிரம்பி வழியுமிக்காலத்தில் சில வரிகளை நீக்கிவிடுதல்வேண்டுமெனச் சில ரபிப்பிராயப்பட்டது பத்திரிகாபிமானிகளுக்கு நன்கு தெரியும். ஆயின் தேசாதிபதியவர்கள் சட்டநிருபணசபையில் விடுத்த நிருபத்தில் எந்த வரியையாவது இப்பொழுது நீக்கிவிடுதல் புத்தியாகாதென்றும், மிஞ்சியிருக்கும் அரசிறை வரும்படியைக் கொண்டே தேசத்தை மேன்மேலும் விருத்திசெய்யக்கூடிய வேலைகளைச்செய்து முடிக்கவேண்டியதென்றும் சொல்லியிருக்கின்றனர். அரசிறை வரும்படி மிதமிஞ்சி யதிகப்பட்டிருக்கின்றமையாலன்றோ யாழ்ப்பாணம் றெயில்வேயையும், களனி றெயில்வேயையும் திறக்க உத்தரவளிக்கப்பட்டிருக்கின்றது. ஐரோப்பிய தோட்டதுரைமாரும் வியாபாரிகளும் மண்ணெண்ணெய் வரியையும், அரிசி நெல்லுக்கு விதிக்கப்பட்டிருக்கும் இறக்குமதித் தீர்வையையும் நீக்கிவிடவேண்டுமென்று வாதாடி நிற்கின்றனர். தலைவரியெனப்படும் றோட்டுவரியே எவற்றிலும் மிக்க கஷ்டமான வரியாயிருந்தும் அதனை இவர்கள் கவனியாது மண்ணெண்ணெய் வரியையும் அரிசிநெல்லுக்கு விதிக்கப்பட்டிருக்குந் தீர்வையையும்நீக்கிவிடும்படி கேட்டுநிற்பது தம்நயங்கருதியன்றிப் பொதுநயங்கருதியன்று. மண்ணெண்ணெய்இப்பொழுதுபலவிடங்களிலும் பாவிக்கப்படினும் அதனை ஊரவர்கள் ஏராளமாகப்பாவிக்கவில்லை. எளிய சனங்கள் ஒரேயொரு விளக்கு மாத்திரம் பாவிக்[illegible]ள். அவ்விளக்கிற்கு ஒரு சதத்து எண்ணெய்தானும் வேண்டியதில்லை, இதற்கு விதிக்கப்பட்டிருக்கும்வரியைநீக்கிவிடுதலால் வறிய சனங்களுக்கு உண்டாகும் நயம் யாதுமில்லை. அரிசிநெல்லுக்குத் தீர்வை விதிக்கப்பட்டிருக்கிறதென்பதுதானும் அநேகசனங்களுக்குத் தெரியாது. இவ்வரியை நீக்கிவிட்டால் வியாபாரிகள் நயமடைவரன்றி ஊரவர்க்கு யாதும் நயம் விளையாது. நீக்கிவிடக்கூடிய வரி யாதும் உளதேல் அது தலைவரியாகும். இவ்வரி கஷ்டமானதென்பதைத் தேசாதிபதியவர்கள் தாமும் ஒத்துக்கொள்வர். இவ்வரியால் அரசாட்சியாருக்கு வரும் வரும்படி அதிகமல்ல. இவ்வரியை நீக்கிவிடுவது அரசிறைவரும்படியை அதிகமாகத் தாக்கமாட்டாது. இவ்வரியைத் தேசாதிபதியவர்கள் நீக்கிவிடக்கூடுமானால் ஏழைச்சனங்களுக்கு அது பெருஞ் சலாக்கியமாயிருக்கும்.

### பெரு மழை.

சென்ற ௩ம் தேதி பெய்த பெருமழை எம்மூர் வாய்க்கால்கள் மதகுகள் கான்கள் ஆகியன எந்நிலையிலிருக்கின்றனவென்பதை நன்கு காட்டிற்று. கொழும்பு சிங்கப்பூர் முதலிய பெரியபட்டினங்களில் எவ்வித பெருமழை பெய்யினும் உடனே வெள்ளமெல்லாம் கடலுட்போய் விழுந்துவிடக்கூடியதாய்க் கான்களும் மதகுகளும் வெட்டப்பட்டிருக்கின்றன. சென்ற ௩ம் தேதி பெய்த பெருமழையால் சீதாரி வாசிகளே அதிக கஷ்டத்தை யடைந்ததாய்க் காணப்படுகின்றது. எமது பட்டினம் இவ்வளவு சீர்கெட்ட நிலையிலிருப்பது சுகாதார சங்கமொன்று இங்கு இல்லாத குறைவாலென்றே யெண்ண காமேலப்படுகிறோம்.

சென்ற ௩ம் தேதி ஏறக்குறையப் பன்னிரண்டுமணித்தியாலங்களுக்கு அதாவது இரா ஒரு மணி தொடங்கிப் பகல் ஒருமணி வரைக்கும் மழை விடாப்பிடியாய் தாரைதாரையாகப் பொழிந்துகொண்டு நின்றது. மேலும் இரண்டுமணித்தியாலங்களுக்கு மழை ஒரேபடித்தாய் விடாதுபெய்திருக்குமாயின் அதிக மோசம் விளைந்திருக்கும். அனேகவிடங்களில் வெள்ளம்நிரம்பி வீடுகளிற்செறிந்துகொண்டமையால்குடியெழும்பினோர் பலர். வெள்ளத்தை அப்புறப்படுத்தப் பலவிடங்களிற் தெருக்கள் வெட்டித்திறக்கப்பட்டன. இதனால் வண்டிகள் போக்குவரவு பண்ணுதலுந் தடைப்பட்டது. வெந்தயீட்டித் பிடுங்கினவன் சிலமாய் மழையாற் சிவர்கள் கரைந்திருந்த சிலவிடங்களிற் கள்வர் புகுந்து களவுயெடுத்தனராம். மழை காலத்திற் சுரம் பேதி முதலிய நோய்கள் உண்டாவதற்கு வெள்ளம் தங்கிநின்று நாற்றமெடுப்பதே விசேஷித்த காரணம். இம்முறை பேட்டை நிலங்களிலும் தண்ணீர்தங்கிநிற்கத்தக்கதாக மழை பெய்திருக்கின்றமையால் அதிக நோயுண்டாவதற்கு இடமுண்டு. இப் பெருமழை எம்மாநகரினர்க்கு நற்புத்தி படிப்பித்திருக்கிறது. இனிமேல் இவ்வித மழைபெய்யும்போது வெள்ளம் விரைவிலப்புறப்படத்தக்க வழிவகைகளை எமதுநகரினர் ஏற்படுத்திவைப்பரெனக் காத்திருக்கிறோம்.

## சமாசாரம்

காலநிலை—மழை அடுத்தடுத்து அமோகமாய்ப் பெய்து நின்றவிட பனி ஆரம்பித்துக்கொண்டது. வயல்களில்நெற்பயிர்கள்காளொருவண்ணமும்பொழுதொருமேனியுமாக ஓங்கி வளர்ந்துகொண்டுவருகின்றன.

தானவரவு—கொழும்பு கன்னாத்தெருவில் வசிக்கும் வியாபாரியார் ஸ்ரீ. சின்னப்பு அவர்கள் தமது மகன் சிரஞ்சீவி சிங்காரவேலுப்பிள்ளைக்குத் திருச்செந்தூரில் நாமகரணஞ்செய்வித்து எமது சபைக்கு ரூபா ௫ தானமாக வரித்தனுப்பியிருக்கின்றனர்.

மெஸ் உவில்மற்—யாழ்ப்பாணம் டிஸ்திறிக்நீதவான் மெஸ் உவில்மற் துரையவர்கள் வருகிற உ௬உ முல்லைத்தீவுசென்று அங்குநூர்கிறிமினல்வழக்கை விசாரித்துத் திரும்புவர் மெஸ் சங்கரப்பிள்ளையவர்கள் முடிப்புறத்துத் தரணியாகவும் அப். ஸ்ரீ. கனகசபையவர்கள் எதிர்பக்கத்து நியாயதுரந்தரராகவுமங்கு செல்வர்.

ஓர்புதுப் பிறக்தர்—இற்றைக்குச் சிலமாசங்களின் முன் பிறக்தர் பரீக்ஷையிற் சித்திபெற்ற ஸ்ரீ. அப்பாசுவாமியவர்கள் தரணித்தத்துவம்பெற்று யாழ்ப்பாணங் கோடுகளில் வேலைபார்க்கும்படியிங்கு வந்திருக்கின்றனர். இவர் அப் ஸ்ரீ. கனகசபையவர்கட்கு ஒன்றைவிட்ட சகோதரன். சென்னையிற் பிரபல தரகராயிருந்து காலஞ்சென்றுபோன ஸ்ரீ. சரவணமுத்தாபிள்ளையவர்களின் மருகர்.

உபசாரனை—எமது உதவிஏசன்றர் மெஸ்லீக் அவர்கள் மாத்துறைக்குச்சென்று விவாகஞ்செய்து சமுசாரசகிதராய்த் திரும்பியபோது யாழ்ப்பாணக்கச்சேரி உத்தியோகஸ்தர்களும் தலைமைக்காரரும் துறைமுகஞ்சென்று அவரையும் அவரது பாரியாரையும் மூன்று நாகங்கள்பூட்டிய அலங்கார வண்டிமீதேற்றி மேளவாத்தியங்கள் கோஷிக்க அவரது இராசதிருக்கைக்குத் தச்சென்று ஓர் உபசாரப்பத்திரம் வாசித்துப் பாரியாருக்கு ஓர் பொற்காப்புமுபகரித்தனர். மெஸ்லீக் அவர்கள் மிக்கசந்தோஷமுடையவராய்த்தக்கவிடையளித்து யாவர்க்கும்வந்தனோபசாரம்சொல்லியனுப்பினர்.

கொலைவழக்கு—வண்ணார்பண்ணை கிழக்கில் தனது பெண்சாதியைக் கத்தியாற்குத்திக்கொன்ற சோனகன் சுப்பிறீம்கோட்டிற்குப் பாரப்படுத்தப்பட்டிருக்கிறான். வருகிற மாகிமாசக்கோட்டில் இவனது வழக்கு விளங்கப்படும்.

களவு—கடைத்தெருவிலுள்ள் வம்பாய் வியாபாரியொருவருடைய சவுளிக்கடையிற்புகுந்து சேலைகளையும் பணத்தையும் களவெடுத்துச்சென்றோர் விரைவிலகப்படுவர் போன்றிருக்கின்றது. மாவிட்டபுரத்திலுள்ள ஓர் கிழவியின் வீட்டில் ஓர் பெட்டியும் சுட்டகடதாசிக்குவியலும் காணப்பட்டதாம். எரிக்கப்பட்டகடதாசிகள் சிலவற்றிற் கடைக்காரனுடைய விலாசம் தோற்றுகின்றதாம்.

மெஸ் V. M. முத்துக்குமாரு—வைத்தியர் ஸ்ரீ முத்துக்குமாரு அவர்களின் இரண்டாம்புத்திரனாகிய இவர் எமது இராசதானியிலுள்ள அரசாட்சியார் கல்லூரியில் ஓர் அசிஸ் உதவி உபாத்தியாயராக நியமனம்பெற்றிருக்கின்றனர். இவரிவ்வுத்தியோகத்தில் ஸ்திரப்படுத்தப்படுவரென நினைக்கின்றோம். இக்கல்லூரியில் எமது சாதியத்தாருள் முதன்முதல் வேலைகொள்ளப்பட்டவரிவரே.

—விக்ரோறியாக்காலீஜ் பிறின்சிப்பல் (Prof J W. Small F. C. S ) ஸ்மோல் பண்டிதருடைய பிறந்தநாட்கொண்டாட்டம் இத்தமீ ௭ம் திகதி அக் காலீஜ் மண்டபத்தில் மிக அலங்காரமாக நடைபெற்றது. இக்காலீஜ் பிறின்சிப்பல் ஸ்ரீ. செல்வத்துரைப்பிள்ளை B. A அக்கிராசனாதிபதியாயிருந்து கொண்டாட்டக் கூட்டத்தை நடத்திப் பண்டிதருடைய கல்வித்திறமையைப்பற்றியும் கல்லூரியைப்பற்றியும் பேசினர். (சடி)

உத்தியோகமாற்றம்—மன்னார்க் கச்சேரி முதலாம் கிளார்க் ஸ்ரீ. சின்னப்பா அவர்கள் திரிகோணமலைக் கச்சேரி முதலாம் கிளார்க்காக நியமனம்பெற அவருடைய இடத்திற்கு ஸ்ரீ. குமாரயாமுதலியாருடைய மகன் ஸ்ரீ முத்துக்குமாரு அவர்கள் நியமனமாயினர். மேலும யாழ்ப்பாணங் கச்சேரி இரண்டாம் முதலியார் ஸ்ரீ. சபாரத்தினமவர்கள் திரிகோணமலைக் கச்சேரி இரண்டாங்கிளாக்காக நியமனம்பெற அவரது இடத்திற்கு மெஸ். குமாரகுலசிங்கமவர்கள் நியமனமாயினர்.

மரணம்—யாழ்ப்பாணங் கச்சேரி இரண்டாம் முதலியார் ஸ்ரீ. சபாரத்தினமவர்களின் பாட்டனார் ஸ்ரீ. முருகேசரவர்கள் சென்ற ௬ம் தேதி தேகவியோகமாகிவிட்டனர். இவர் சிவபக்தி சிவனடியார் பக்தியிற் சிறந்தவர். கொக்குவில் கிழக்கிலுள்ள முருகமூர்த்தி கோயிலைக் கட்டிக் கும்பாபிஷேகஞ் செய்வித்தவரிவரே. இவரை யிழந்து துன்புறும் இவரது பௌத்திரன் ஸ்ரீ. சபாரத்தினமவர்களோடும் ஏனைய சுற்றமித்திரரோடும் நாமுமனுதாபப்படுகின்றேம்.

ஸ்ரீ. மு. கார்த்திகேசையர்—வழக்கமாக 'இயற்றமிழாசிரியர்' 'புலவர்' என்னும் நாமங்களால் அழைக்கப்பட்டவராகிய இவர் சென்ற புரட்டாசிமீ உஉம் திகதி தேகவியோகமெய்தினர். இவர் கோதாவரியிலி

ருந்துவந்து காரைநகரிற் குடியேறிய மேருகிரியையர் வர்களின் வழித்தோன்றல். இவர் தந்தையாகிய முருகேசையரும் தமிழ் சமஸ்கிருத பாஷாவிராயய் சோதிட வைத்திய சாஸ்திரங்களிற் பேர்பெற்ற ஓர் புலவர். தந்தையைப்போலவே இவரும் சமஸ்கிருதத்திலும், தமிழ் இலக்கிய இலக்கணங்களிலும் வல்லவர். சோதிட வைத்தியத்திலும் சமர்த்தர். சிலநூல்களுக் காக்கியோனுபதேசம் 'விதானமாலை' 'தெக்ஷணகைலாசபுராணம்' முதலிய நூல்களைத் திருத்தியும் புதுக்கியும் பிரசுரித்தவர். சுத்த வைதிக சைவர். பதிசாஸ்திரங்களில் மிக நுண்ணிய நிபுணர். இவரிடத்துப் பாடங்கேட்டுப் பிரபலமுற்ற மாணாக்கர்கள் பலருளர். (கடிதன்)

வங்காளக்கடலிலடித்த புயல்—நூகிலிப் பட்டணத்திலிருந்து கொழும்புக்குவந்த ஓர் கப்பல்மாலுமி நூகிலிப்பட்டணத்திற்குச் சிறிது தூரத்திலடித்தபுயலில் அகப்பட்ட நாலுதோணிகளில் இரண்டு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தனவென்றும், இத் தோணிகளிலொன்றாகிய "மாணிக்கபிரகா" என்னுந் தோணியிலிருந்த இரண்டுபேர் சமீபத்தில் நங்கூரம்போடப்பட்டுநின்ற ஓர் வடகரைத்தோணியால் மீட்கப்பட்டனரென்றும் தெரிவித்தனர். ஒருபலகையினுதவியைக்கொண்டு இவ்விருவரும் நீந்தி நீந்தி மாலைப்பொழுது நேரத்தில் இவ்வடகரைத் தோணிக்குச் சமீபமாய் வந்து தரவைவிட்டார்களாம். நீந்திவந்தவர்களில் ஒருவன் தோணியிலிருந்த ஒருவனுடைய சகோதரனும். இவன் தனது சகோதரனுடைய குரலெனவறிந்து ஆவலோடும் சென்று அவனுக்குதவிபுரிந்து அவனை மீட்டனனும். இவ்விருவரும் ஏறக்குறையப் பன்னிரண்டு மணித்தியாலங்களுக்கு நீரிற் கிடந்த அவஸ்தைப்பட்டனராம்.

பாம்பன் புகைரதவீதி—இந்திய துரைத்தனத்தார் மதுரையிலிருந்து பாம்பனைப் புகைரதவீதியால் இணைக்கவேண்டுமென்று தீர்மானித்து, அப்புகைரதவீதியை இலங்கைப்புகைரதவீதியோடிணைக்கும்படியான சம்பாஷணைகளை இலங்கைத் துரைத்தனத்தாருடன் பேசிவந்தார்கள். புகைரதவீதி போடப்படுங்காலத்தில் பாம்பன் கால்வாயில் ஒரு அடிக்கு என்ன செலவுபிடிக்குமென்ற மதிப்புக்கணக்கும் எடுக்கப்பட்டது. ஆனால் பாம்பன் கால்வாயில் அவ்விதமான ஓர் புகைரதவீதியை நீட்டுமிடத்து அமோகமான செலவுபிடிக்கும். பாம்பனுக்கும் மதுரைக்குமிடையே புகைரதவீதி திறக்கப்படும் விஷயம் எப்பக்குவத்திலிருக்கிறதாக இலங்கை தேசாதிபதியவர்கள் அறிய விரும்பி, இந்திய துரைத்தன இராசமாலிகரைக் கேட்கும்படி ஆக்கியாபித்தமையால் இந்திய இராசமாலிகரிலிருந்து இப்புகைரதவீதித் தாபனத்தைக் குறித்து உத்தரமொன்று இலங்கை இராசமாலிகருக்கு அனுப்பப்பட்டது. அதில், மதுரையிலிருந்து பாம்பனுக்குப் போடவேண்டுமென்ற புகைரதவீதி திறக்கப்படுவதற்கு உத்தரவாகப்பட்டதென்றும் அதற்குரிய எல்லா வேலைகளும் அடுத்தபுதுவருடாரம்பத்திலேயே துவக்கப்படுமென்றும் வைகைநதியின் வலதுபக்கமாகவோ அன்றி இடதுபக்கமாகவோ அவ்வீதி திறக்கப்படவேண்டுமென்று தீர்மானியாதபடி ஆலோசனையிலிருப்பதாற்றான் அவ்வேலைகள் யாவும் தாமதப்பட்டிருக்கிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்புகைரதவீதி நிறைவேறிப் பாவனைக்கு விடப்படுமானால் இந்திய இலங்கை வர்த்தக விஷயங்கள் பாம்பன் மூலமாய் நடைபெறுவதற்கு ஏதுவாகும். இந்தியாபிரயாணிகள் பெருஞ் சிரமமில்லாமல் பாம்பன்மார்க்கமாய் இலங்கையின் எத்திசைக்கும் செல்லக்கூடிய வசதியாயிருக்கும்.

பி—கு. வி—ன்.

## கடிதம்

### வருணம்.

பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரரென நான்கு வருணத்தாருளர். வேதமோதலோதுவித்தல், யாகஞ் செய்தல் செய்வித்தல், தானமேற்றலாதிய தொழில்களைச் செய்தற்குப் பிராமணரும், பூமியைக் காத்தல், படைக்கலம் பயிலலாதிய தொழில்களைச் செய்தற்கு க்ஷத்திரியரும், பசுக்காத்தல், வணிகஞ்செய்தல், பயிரிடுதலாதிய தொழில்களைச் செய்தற்கு வைசியரும், சூத்திரரும் வேண்டியவர்களாயிருக்கின்றார்கள். இந்த வருண ஏற்பாட்டைக் குறித்து ஊன்றி யோசிக்குமிடத்து, ஆரியருடைய விவேகம், நாகரிகம் முதலியவற்றை அது நன்கு விளக்குகின்றது. இனிச் சூத்திரராயினும் ஒழுக்கமுடையவராயிற் பிராமணரெனப்படுவர். பிராமணராயினும் ஒழுக்கமில்லாதவராயிற் சூத்திரரெனப்படுவர். பிராமணருள்ளும் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரருண்டு. க்ஷத்திரியருள்ளும் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரருண்டு. வைசியருள்ளும் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரருண்டு. சூத்திரருள்ளும் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரருண்டு. அவரவர் நடைகளினாலே அவரவரைப்பகுத்தறிந்துகொள்ளலாம். "மறப்பினுமோத்துக்கொளலாகும் பார்ப்பான்—பிறப்பொழுக்குன்றக்கெடும்" "சூத்திரனுந் தேசிகனுவான்." இனிச் செய்தொழில் வேறுபாட்டால் பிராமணரும் நான்கு சாதியாராக வகுக்கப்படுவர். க்ஷத்திரியரும் அத்தொழில்வேறுபாட்டால் நான்கு சாதியாராக வகுக்கப்படுவர். வைசியரும் அத்தொழில்வேறுபாட்டால் நான்கு சாதியாராக வகுக்கப்படுவர். சூத்திரரும் அச்செய்தொழில்வேறுபாட்டால் நான்கு சாதியாராக வகுக்கப்படுவர். இது நீதிநூலோர் துணிபு. இனி வைதிக சைவ சுத்தாத்துவித சைவசித்தாந்த சமயாசிரியருணெறியாம். இவ்வருணெறியை முன்னைப் பெருந்தவத்தாளர்களுஞ் சத்திநிபாதத்தாலெய்தப்பெற்றுச் சிவதீக்ஷைபெற்று வேதாகமத்தில் விதித்தபடி ஒழுகு மேன்மக்கள் ஆதிசைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்தரசைவர், பிரவரசைவர், அந்தியசைவர் என அறுவகைப்படுவர். அநாதிசைவனாகிய சிவன்முகத்துதித்து அவனருளுந் தீக்ஷையுற்று வரும் பிராமணர் ஆதிசைவர். அவர்பாற் தீக்ஷைபெற்று வரும் பிராமணர் மகாசைவர். அவர்பாற் தீக்ஷைபெற்று வரும் க்ஷத்திரியரும் வைசியரும் அநுசைவர். அவர்பாற் தீக்ஷைபுற்று வரும் சற்சூத்திரராகிய வேளாளர் அவாந்தரசைவர். அவர்பாற் தீக்ஷைபெற்றுவரும் அநுலோமர் பிரவரசைவர். அவர்பாற்தீக்ஷைபெற்றுவரும் மற்றைய சமயிகள் அந்தியசைவர். இது நீதிநூலோர் துணிபு சாஸ்திரத்துணிபுமாம். இவ்வரலாறுகளும் நமது ஆரியருடைய விவேகம் ஒழுக்கம் முதலியவற்றை நன்கு காட்டுகின்றன. இவைகளையெல்லாம் ஊன்றிச் சிந்திக்கும் எந்த விவேகியும் நமது ஆரியருடைய சாதிக்கட்டுப்பாடுகளைப் பலபட விரித்து புகழ்வதன்றி நிந்திக்கமாட்டான்; "குலத்தின்கண்ணாரின்மை தோன்றின் அவனைக்—குலத்தின்கண்ணையப்படும்" "குலத்தளவேயாகுங்குணம்" "சாதிகுலம்பிறப்பென்னும்" என்பர்மேலோராதலான். இனி இக்காலத்துள்ள பிராமணருட் சிலர் நந்தனப்பாகனார் முதலியவர்களை பிராமணராகிய தாங்கள் வணங்கப்படாதென்று அறிவீனத்தாற் பிதற்றுகின்றார்கள். இவர்கள் இப்படிப் பிதற்றுவது தமையமைப் புலமையோர்க்குச் சாலநகையினைத்தருகின்றது. இப்பிராமணர்களையொக்குஞ் சைவசிகாமணிகளை நாங்காறும் நாம் கண்டனமல்லேம். இப்போது கண்டு களிப்பின்வண்ணமே. இவர்கள் மயல்தீரற்கு சில வரலாறு சுருங்கச்சொல்லி விளக்கிவைத்துக் காட்டுவாம். நாம் முற்கூறியவைவெல்லாம் கருமகாண்ட முறை. ஞானகாண்ட நெறியில் இம்முறையன்றியும் அதிசயமாக வழிபாடுங் கொள்ளப்படும். அநுலோமரான விதுரர், துருவாசர் முதலிய பிரமவிருடிகளுக்கும், அநுலோமரான சூதர், நைமிசாரணியப் பிரமவிருடிகளுக்கும், பிரமோபதேசமும், புராணோபதேசமும் செய்த வரலாறுகளும் பிறவும் இதற்குச் சான்றாகப் போதுஞ் சாட்சியாகும். இன்னும் சைவவேளாளர் மரபில்வந்தவதரித்த பரமாசாரிய சுவாமிகளான திருநாவுக்கரசுநாயனார் தம்மை வணங்க வைதிகப் பிராமணர் மரபில் வந்தவதரித்த பரமாசாரியசுவாமிகளான திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அவரெதிர் வணங்கிய வரலாறும், அப்பூதியடிகளென்னும் விப்பிரர் திருநாவுக்கரசுநாயனாரை உபாசித்துக் கதியடைந்த வரலாறும், சிவப்பிராமணர் மரபில் வந்தவதரித்த பரமாசாரிய சுவாமிகளான சுந்தரமூர்த்திநாயனார் அறுபத்துமூவர்நாயன்மாருள்ளிட்ட ஆதிசைவவேதியரல்லாத மறையவர் முதலிய நாற்குலத்தவதரித்த நாயன்மார்களையும், மற்றைக்குலங்களிலவதரித்த நாயன்மார்களையுந் துதித்து அவரடியர்க்கடியரா முறைமைபேணித் திருத்தொண்டத்தொகை பாடிய வரலாறும், சிவப்பிராமணமரபில் வந்தவதரித்த சகலாகம பண்டிதரான அருணந்திசிவாசாரியரும், அவர் ஞானோபதேசவழிவந்த வைதிகப் பிராமணர்களான மறைஞானசம்பந்தசிவாசாரியர் உமாபதிசிவாசாரியரென்னும் பெரியோர்களும், வேளாளர்மரபில் வந்தவதரித்த மெய்கண்டசிவாசாரியர் திருவடிவழிபாடுபேணிச் சிவஞானபோதநெறி கடைப்பிடித்தொழுகிச் சிவானுபூதியுற்ற வரலாறும், தில்லைவாழந்தணர்குலத்தில் வந்தவதரித்த மற்றவ் வுமாபதிசிவாசாரியர் வேளாளர்மரபில் வந்தவதரித்த சேக்கிழார்நாயனார் புராணவரலாறு பாடி அவரடிப்பத்தி பேணிய வரலாறும், அருணெறிபற்றியமைந்த முறையிற்றழுவப்படும் பெருஞ்சான்றுகளாம்.

S. பொன்னம்பலபிள்ளை
மூளாய்.

### பாரபட்சமென்பது
### பாமரத்வ[illegible]ன்பது

உதயதாரகை ௫௮ம் புத்தகம் ௨௧ம் சங்கையில் "நியாயாபிமானி" என்றொருவர் "கீழ்க்குலப் பிள்ளைகள் சிற்சிலபுறப்பள்ளிக்கூடங்களிற் படிப்பிக்கப்படுகிறார்களன்றி அரசாட்சியினுதவிபெறு மனேக புறப்பள்ளிக்கூடங்களிலும் உட்பள்ளிக்கூடங்களிலும், இங்கிலிசுப்பள்ளிக்கூடங்களிலும், படிப்பதற் கிடம்பெறுமலிருக்கின்றனர்" என்றும்: இது பாரபட்சமென்றும், மூளங்கி அம்பட்டினில்லாது உபாத்திமார், முகாமைக்காரர், வித்தியாதரிசிகள், வித்தியாசர்த்தர்கள், வித்தியாகோட்டியார், ஆதியோரையுங் கூவி "இது தர்மம்" என வினவியும் பாரடிப் பாராயினர். இவர் போதனையும் சாதனையும், (Ridgeway) திற்சுவேகாதனையும், பட்பூதனையும், சமாசனத்திருத்திச் சமத்துவசங்கைசெய்தாலென்! என்ன வினவன்ன வினவாயிருத்தலின் மவுனமே மகத்துவமென்றிருப்பது தகுதியென்றுள்ளியும், நியாயாபிமானி மீதேறிய விரகத்தானேனண்டோர் நியாயத்தை மாத்திரங்கூறி மவுனிக்க வாஞ்சித்தேம்.

நம் நியாயாபிமானி தம்விடயத்து வேண்டிய யாண்டும் "கீழ்சாதி-கீழ்க்குலம்" என்றொன்றுண்டென்றுஸ்திரப்பட்டு நம்பி எடுத்தாண்டமையினை அப்பகுப்பவர்க்கு வெறுப்பு என்பது பொருந்துமன்றி; அப்பகுப்புண்டென்பது அவர்க்கு உடம்பாடன்றென்பது பொருந்தாதாக: அதை நன்குக் கூறுதவிடுகின்றேம்.

நம் நியாயாபிமானி கீழ்க்குலத்தாரெனக் கூறும் நளவர், பள்ளர், பறையர், வண்ணார், நாவிதர், ஆதியோர் கல்வி கற்கப்படாதென்றும், நாகரீகத்தில் வரப்படாதென்றும், நாம் சொல்ல வல்லமல்லம். இவர்கள் கல்வி நாகரீகக்குறைவாலே கீழ்மக்கள் என்றாளப்பட்டாரன்றிக் கீழ்சாதி என்றொன்றென்று மின்றென்று நம் நியாயாபிமானி கூறுவாரெனில்: நாம் நம் நியாயாபிமானியை மேற்கூறிய பள்ளன், பறையன் என்பதாதி மொழிகளால், அன்றிக் கீழ்சாதி என்பதாதி மொழிகளால் விளிப்பினும், இவர்கீழ்வருறவினரென வுரைப்பினும். அவரோடுண்ணவும் அவர்மனைக்கணுண்ணவும், அவர்களுத் தம்மினப்பெண்ணை வைவாகிகமுறையாக் கொடுக்கவும், அவர்களினத்துப் பெண்ணைத் தாம் சடங்குசெய்துகொள்ளவும், அவரோடு சமாசனத்திருக்கவும், பின்னில்லாரென நாம் கூறினும் இவ்வாறு கூறிய நம்மில் நம் நியாயாபிமானி குறைகூறுரென்புது எமது சித்தாந்தம். அது: இவர்க்குச் சாதிவழக்கு மிக வெறுப்புடைத்தாயிருத்தலினென்க.

இனி: மேலோர், கீழோர், என்னும் வழக்கை நியாயாபிமானியாலும் ஒழிக்கவேலையாதும். நாகரீகம், செல்வம், கல்வி, அதிகாரம், ஆளுகை, விவேகம், உடையரென் றனுட்டிக்கப்படும் அங்கிலேயர்தாமும் மனுட்டிக்கின்றாரென்பது இவராறியாரேல்: இங்கிலாந்திலே (Norfolk) கோர்வோக் என்பவரின் குடும்பத்தார்க்கு இன்றுமிருக்கும் விசேடகண்ணியம் எதனாலென்று தேமயாராய்ந்து தேறுவாராக. இங்கே கீழ்மாபினராக நியாயாபிமானி, தமது கீழ்க்குலப்பிள்ளைகளைச் சமாசனத்திருத்தவேணுமென்றும், மற்றோரோடு பேதமின்றிக் கலக்கவேண்டுமென்றும், விரும்புகின்றாரன்றி: அவர்களைத்தியம் கற்கவேண்டுமென்று விரும்புகின்றாரல்லரென்பது யார்க்குந் தெள்ளிதிற்றோற்றக் கிடக்கின்றது. அது: கற்கவேண்டுமென்னும் விருப்பேல்: கீழ்க்குலப் பிள்ளைகளுக்காய் ஒரு வித்தியாசாலையை யுருவித்து நடைபெறச் செய்யாதிருப்பதென்னை? என்னும் வினைவை நிகழ்த்தலே நியதியாதலினூர், இதையிவ தெரிந்தலினுமென்க.

இனி: "சிற்சில புறப்பள்ளிக்கூடங்களிற் படிப்பிக்கப்படுகிறாரன்றி" என்றார், அவ்வாறான புறப்பள்ளிக்கூடங்களிலே அவர்களை ஆசாரம், குலம் நோக்கி இருந்த தக்க வசதியான இடங்களிருத்தலின் அவ்வாறிருத்திப் படிப்பிக்கின்றாரென்பதையும்; உட்பள்ளிக்கூடங்கள் இங்கிலிசுப்பள்ளிக்கூடங்களிலவ்வாறுசெய்ய வசதியான இடங்களில்லாமையினே யொழித்துவிடுகின்றாரென்பதையும், முக்கியதில் இடங்கொடுத்தமையினே அவர் கற்பது சமஸ்தர்க்கும் சம்மதமேயென்பதையும், நியாயாபிமானி சிந்திக்கக்கடவர்.

இனி: உட்பள்ளிக்கூடங்கள் இங்கிலிசுப்பள்ளிக்கூடங்கள் அரசாட்சியினும் மிஷனரிமாரினும் பொருட்சகாயத்தைப்பெற்று நடைபெறுவதளவினில்லாது: மாணாக்கர் பொருட்பேற்றையும் பெறுவது யாருமறிந்தது. இவ்வித வித்தியாசாலைகள் பொருள்கொடுத்தும், சீவனார்த்தத்தின் முயற்சியால் காலதாமசமின்றி நியதியாய் வித்தியாசாலை வந்து கற்றுப் பரீட்சையவனளித்தும் வரும் மேன்மக்களின் பிள்ளைகளைத் தள்ளிவிட்டு நியாயாபிமானிபக்கத்துப் பிள்ளைகளை வைத்துக் கற்பிக்குமாயின் அவ்வித்தியாசாலை நிலையுறவது கூடுமோவென நம் நியாயாபிமானி யூன்றிச் சிந்திக்கவில்லைப்போலும். கீழ்க்குலத்திள்ள ஒருபிள்ளையைச் சேர்க்கமரபு ஆசாரம் என்பவைகளிற் கண்ணுமிருப்பவரான ஏனைய மாணாக்கர் ஏகோபித்து அவ்வித்தியாசாலையையொழித்துவிடுவாரென்பதும், அவ்வாறொழித்துவிடுங்கால் வித்தியாசாலை நிலைபாறி நடைபெறுதென்பதும், அங்ஙனம் நடைபெறுதொழியின் உபாத்திமார், வித்தியாதரிசிகள், என நியாயாபிமானி கூறினோர்க்கு உத்தியோகமில்லையாமென்பதும், இதினாலேயே நியாயாபிமானி கூவியோலமிட்ட அப்பாலார் இவ்விஷயத்தில் மேலோர்பக்கத்தை முற்றுயத் தழுவிக்கொள்வதென்பதும், நியாயாபிமானி யுணர்ச்சிக்குத் தூரப்பட்டது மிக வெட்கமான காரியம். அத்தியாபகர்கள், அத்தேவாசிகள், வித்தியாதரிசிகள், ஆதியோர்க்குத் தமபோதும் நுண்ணறிவும், தர்மசிந்தையுமில்லையென நியாயாபிமானி யெண்ணினார்போலே.

இனி: அரசாட்சியாரால் "தமிழருக்குள்ளே மேல் கீழ் என்னும் பகுப்பும் அப்பகுப்புகளுக்குரிய பிரமாணமுமுண்டாயிருப்பின் கீழ்மக்களுக்காகவும் சட்டநிருபணச் சபையிலோர்பிரதிநிதியிருத்தல்வேண்டும்;" என்கிறார். அரசாட்சியார் தேசாசாரம், யதாசாரம், எண்டவைகளுக்கிசைந்து இடங்கொடுத்து நடப்பதை விவரறியாராயின் இவர்கூறு மிவ்விஷயத்தி லரசாட்சியாரிதுகாறும் நியாயாபிமானி பக்கத்துப் பிள்ளைகளை வைத்துச் சமாசனத்திருத்திப் படிப்பிக்கவேண்டுமென விதியாமையையும், நியாயாபிமானி பக்கத்தார் மேளதாளம் சுரிகை முதலிய வழங்குழி வழக்கத்துக்கு விரோதமானதாகச் செய்யப்படாதெனச் சமராடும் எம்பாலாரோடெரத்தகித்றலையும், தேர்ந்திவாராக. உடையார்வேலை, விதானைவேலை, மணியவேலை வேண்டுமென நியாயாபிமானி பக்கத்தார் (Agent) ஏசன்றரிடங்கேட்பின் கொடுக்கலாமன்றோ? அவர்களுக்குக்கொடாதொழியின் அது பாரபட்சமன்றோ! என்றும் வினவித் தம்பாலார்க்கு இவ்வுத்தியோகங்களை வாங்கிக் கொடுக்கவும் நம் நியாயாபிமானி துணிவார்போலே, சட்டநிருபணசபையிலே நியாயாபிமானிபக்கத்தார்க்கோர் பிரதிநிதி வேண்டுமென ஒரு காலம்வருமேல், நம் நியாயாபிமானியையே அரசாட்சியார் தக்காரெனக் கொள்வாரென்பதெங்கருத்து. உலகெங்கணுஞ் செறிந்து விளங்குமெச்சாதியாரும் எம்மதத்தாரும் மரபுவழக்கை யனுட்டித்துவருவது யாருமறிந்தது: நுண்ணறிவும் மார்க்கபத்தியும் தர்மசிந்தையுமுடைய நியாயாபிமானிக்கது வெறுப்பாய், அநியாயமாய்த் தோற்றுவது வெகு நூதனமாமே. நியாயாபிமானி இவ்விஷயத்தை முசிப்பாற்றிச் செழுதினாரோ விஷயமெழுதிப்பழகும் நோக்கமாயெழுதினாரோ தமது விவேகத்தைப் பிறர்க்குக்காட்ட வெழுதினாரோ அவர்களுரிமைகொண் டெழுதினாரோ அறியேம். இதனால் நியாயாபிமானி யறிவும் மரபும் வெளிப்பட்டது. யதாபூர்வமாயுள்ள விப்பெருவழக்கை நிர்மூலப்படுத்தவேணுமெனக் கருதிய நியாயாபிமானி தனிவுறுங்கிடைத்தன்றோக்கி மலையையுடைக்கத் துணிந்த மந்திக்குரங்கின் தனிமையொக்குமென்று நம் நியாயாபிமானி யோர்ந்து தமக்கொவ்வாக்காரியத்திற் றம்மை மாட்டிப் பெரியோர்க்குக் கோபத்தைமூட்டி தம் மடமையைக்காட்டி அலப்பேனைகாட்டி குலமக்கள் மனதை வாட்டி இரவல் வாசகங்களையீட்டி இழிமொழிகளைத்தீட்டிக்கொள்வதை இத்துடனிறுத்துவரென நம்பினம்.

அறிவுகுறிய நீவார்க்கும் குலநெறியறியாச் சிறியார்க்கும் வயிறுவளர்க்கும் நோக்கத்தால் மார்க்கமாறிய புல்லர்க்கும் உவப்புமொப்புமான நியாயாபிமானி தாபனம கல்லிடம் நற்குலமுடையார்க்கு வெறுப்புமருவருப்புமாமே.

இங்ஙனம், ஆதாரதியபுரம்
சடாக்ஷரம்.

surplus of from one and a half million to two million rupees at the end of the present year, which is larger than that of 1897. We shall give a further summary of His Excellency's address in our next issue.

## LOCAL AND GENERAL.

The District Judge—Mr. C. Eardley-Wilmot will proceed to Mullaitivu on the 26th Instant to hear a criminal case. We understand that Mr. T. C. Changarappillai, Proctor, has been deputed to prosecute in the case.

Mr. T. M. Tampoo—Mr. Tampoo, Proctor, has resumed the practice of his profession and his duties as Crown Proctor. Mr. T. C. Changarappillai has been relieved of his duties as acting Crown Proctor.

Committed to the Suppreme Court—The Moorman of Vannarponnai who stands charged with the murder of his wife has been committed to take his trial before the Sessions of the Supreme Court to be holden in February next on the charge of murder.

Mischief by fire—One Thalayasingham who is said to have been one of the persons who set fire to a house at Manippay in July last, has also been committed to take his trial before the Supreme Court. It will be within the recollection of our readers that another person who was charged with the same offence was tried and convicted at the last Sessions of the Supreme Court

Housebreaking by Night—A Bombay merchant of Jaffna lost property worth about Rs 1500, on the 31st Ultimo, in consequence of a housebreaking and theft committed in his boutique at Grand Bazaar. The offenders have not been traced out as yet except an old woman who has been brougt up before the Police Court of Jaffna and in whose possession a few of the stolen articles were found. Two Police Constables are always detailed for duty at the road fronting the Grand Bazaar boutiques, and it is a puzzle to us how the burglary was committed, unknown to and undetected by, the Constables. The entrance, we understand, was effected from the road side by opening the padlocks with false keys.

Mr J. H. Leak—The Office Assistant to the Government Agent, Northern Province, who proceeded to Matara to be married, has returned to Jaffna with Mrs. Leak. The clerks of the Jaffna Kachcherri, the Mudaliyars, and Headmen repaired to the Jetty and received them on the occasion of his landing. An address of welcome was read at Mr. Leak's residence by Mr. Bastiampillai Mudaliyar. Mr. Leak replied suitably thanking the officers for the reception accorded to him and Mrs. Leak and eulogising the people of Jaffna.

A New Proctor—We extend a hearty welcome to Mr. V. Appaswamy, who, after creditably passing the Proctors' Examination held in July last, has returned to Jaffna to practise his profession in the Jaffna Courts. Mr. Appaswamy received his education in Madras before entering upon the study of law. He is a gentleman of much pluck and intelligence, and will, we hope, soon make his mark in the profession Mr. Appaswamy comes of a distinguished family in Jaffna, being a cousin of Mr. Advocate Kanagasabai, and a nephew of the late Mr. Saravanamuttupillai, well-known in Madras.

Mr. K. Kanagasabai—Mr. Proctor Kanagasabai of Point Pedro, who was admitted a Proctor about six months ago, and whose practice was hitherto, for the most part, confined to the Point Pedro Courts, has resolved on practising his profession before the District Court of Jaffna. He has taken out a house at Jaffna and begun work in right good earnest Considering the influence he and the members of his family wield in Vadamaratchy and other divisions of Jaffna, Mr. Kanagasabai is bound to secure a good practice.

A Man found dead—We understand from a contemporary that the dead body of a man who seems to have met with his death by violence was discovered at the main road to Point Pedro in Vadamaratchy. If it is a case of murder, it is to be hoped that the Police Magistrate will spare no pains in tracing out the culprits

The Cocoanut Estates of Messrs Todd—Messrs Cargills, Limited, Colombo, who are decree holders in writs Nos 10827 and 10828 D. C. Colombo, having seized in September and October last the estates which belonged to Messrs Todd who are judgment debtors under the said writs, Mr. R M. A R. A R. Supiramanian Chetty who purchased the said estates save Vidattalpalai on 28th April 1898 by deed attested by T. C. Changarappillai, Proctor and Notary, under No 319, and who is the mortgagee of Vidattalpalai, laid claim to the said estates before the Fiscal, Jaffna. The claim having been reported to the District Court of Jaffna, Mr. C. Eardley Wilmot released the said estates from seizure on the 15th Instant. Messrs Cargills, Limited, are ordered to pay the Fiscal's charges. We have to warn the creditors of Messrs Todd at Colombo against seizing the cocoanut estates lately owned by Messrs Todd. Supiramanian Chetty having purchased the said estates has paid and settled the debts of all creditors of Messrs Todd, whose claims are superior to his own, and now holds an absolute and indefeasible title. Those who seize the estates will, instead of recovering their dues, be obliged to pay the costs of the claim which is sure to be preferred by Supiramanian Chetty.

The Vavonia District—Since the 15th November 1898, Vavonia has ceased to exist as a separate District either for Judicial or Revenue purposes. A part of the Vavonia District has been attached to Mannar, another part to Mullaitivu, and a slice to Jaffna. If the Railway is to be extended to the North what is the meaning of the abolition of the Vavonya Assistant Agency and the Courts?

A Tamil appointed to a mastership in the Royal College—Mr. V. M Mutu Coomaru, second son of Dr. V. Mutu Coomaru, L C M. C, has been appointed one of the Assistant Masters in the Royal College. We believe that this is the first instance of a Jaffna Tamil being appointed to a mastership in the Royal College. The appointment is temporary, but we hope that ultimately Mr. Mutu Coomaru will be confirmed in the post Several Burghers and Singhalese have been appointed Inspectors of Schools and Masters in the Royal College. But hitherto, no such appointment has been conferred on a Tamil.

### A VINDICATION.

We have received a long letter controverting the facts appearing in a communicated article in the "Jaffna Catholic Guardian" in which Mr Sapapathy, the Interpreter of the Minor Courts, Jaffna, is taken to task for being a party to an arrangement, whereby an exchange of duties has been effected between him and Mr. V. Thambipillai, doing duty, in consequence of the arrangement, as Head Clerk of the District Court of Jaffna, and Mr. C Vinasitamby, doing duty as Chief Clerk of the Chavakachcheri Courts. As far as we know Mr. Sapapathy did not take active steps to secure an exchange of duties. Any how, we do not think that the public interests are affected by the exchange Each of the gentlemen concerned is quite competent to do the work now assigned to him. Mr Sapapathy, who comes in for a large share of the censure of the correspondent of the "Guardian," has been in the Public Service for twenty years, and before his transfer to Jaffna had been employed in Colombo and Vavoniya. He had acted in other capacities than as an interpreter, and has given entire satisfaction to his superiors in the discharge of the duties of every office he has been called upon to perform. As a Clerk in the Minor Courts of Jaffna, in the Court of Requests of Colombo, and in the Courts at Vavoniya, Mr. Sapapathy discharged his duties most efficiently and acquitted himself most creditably. We think that the above summary of the correspondence addressed to us, the facts of which we fully endorse, will set matters right in the eyes of the public, and the publication of the whole correspondence is unnecessary. The arrangement sanctioned by the Government has benefited all the officers concerned without, in the slightest degree, jeopardising the interests of the public and the Government, whom they are appointed to serve So long as such an arrangement benefits the officers without clashing with public interests, it has to be welcomed and not deprecated.

### BUDDHA—THE INDIAN PROPHET.

A public Meeting was held, at Pachaiyappa's Hall at 5.30 P. M. yesterday, when the Rev. S. Fletcher Williams delivered a lecture on the above subject. The Hon: Mr. Justice S. Subramanya Iyer presided on the occasion. The following gentlemen were present amongst others:–Raja Sir Savalai Ramaswamy Mudaliar Kt., C. I. E., the Hon: Mr. P. Rangayya Naidu, Mr. W. J. Goodrich and Mr. K. B. Ramanathan, M. A. B. L. The lecturer spoke nearly for an hour and a half on the subject. He said:—

Buddha was one of the purest, most loving, and most self-denying men that ever appeared on earth. A young man, born in happy home, born of a just and generous father and a loving mother, cradled in wealth and luxury, welcome to life by the best it had to offer in the way of outward advantage—heir to a noble name, heir to a throne. He was virtuous; he was intellectual; he was beautiful; he was popular; he married a young wife, who also was pre-eminently beautiful and good; life opened on him, as far as outward blessings went, with all the glow and splendour of an Eastern morning. But his happiness was poisoned by the spectacle of the sufferings of those around him—sufferings which were too great, too many, too deeply rooted in the fixed conditions of human life to admit of his relieving them. His thoughts, his studies, his enthusiasms were thus grounded in a most unselfish, generous impulse; and when he renounced his home and crown, when he gave up his wealth, when he laid aside his power, to become a beggar and a solitary recluse to meditate amid self-imposed hardships upon the ultimate secrets of human destiny, which of us could have failed to admire and recognise the loftiness of his motive? Which of us would not admit that his love of such truth as he hoped to win, and the sacrifices he so cheerfully and unflinchingly made in order to attain it, are virtues which Christians of to-day may emulate but cannot surpass? Which of us will say that it is possible for honest Christians to think over the career of this prince who became a teacher and saviour of men without some keen feelings of humiliation and shame? Clearly he was a character to whom power over the outward circumstance of his fellow-men was of little account in comparison with the power to elevate, perhaps to govern, hearts and minds. Clearly he was one of that higher order of men who think more of the charities of life than of its outward advantages; more of the independence of conscience than of the law of easy circumstances; more of the happiness of multitudes than of personal privileges and position; more of the future destiny of man than of the splendid but transient present. The very defects of Buddhism came in a sense from its greatness. It was so permeated with the thought of the spiritual that it discerned nothing of the low or material. It saw eternity so large that there was no place for time. Life shrank to nothing, for the immense legend overshadowed and annihilated it. And so the faith was solitary, mournful, cheerless to the last degree. It dwelt on the dark and ghastly. It lacked the element of cheer and joyousness. How it disparaged all things of time. The saints were to dwell on death, to dress in rags, to spend nights in cemeteries, to meditate on the inevitable destruction coming to all. Earth was made a wilderness, a charnel-house, a dismal, mouldy tomb. Such disparagement of life and its scenes of the human body and its enjoyment, one could never wish to see a second time, as they are in these Scriptures. It is grim and ghastly. We say instinctively it is a mistake, a blighting, fatal error. With our Western temperament and habits we cannot endure it. But for the Eastern soil it was hardly strange, or, perhaps, we may say absurd. And let us not be unjust. Let us look nearer at home. We need not go far from ourselves to find the like of it. I open a prayer book extensively used and find there disparagement of life—denial of all truth and beauty in this world. It is becoming recognised that true victory is not to be gained by the pusillanimous withdrawal from the conflicts of the world but by the victory over and in the midst of them. The true deliverance and peace came not by renunciation and repression but by exaltation, enlargement and harmonious development. Let none abdicate or think for a moment of retiring from exertion. Any work, however coarse or ungrateful to the feeling, is infinitely better than none. Do something, and keep mind and heart ever alive. 'I feed,' says Giordana Bruno, "upon high endeavour." There is no rust so fatal as the rust of inaction. And yet there are in Buddhism elements of eternal truth and beauty. Like Christianity its central idea is personal salvation, or the salvation of the soul by personal acts of faith and obedience. Like Christianity, it has its doctrine of reward and punishment. The essence of all its ethics is the immutable, the inevitable the unalterable consequences of good and evil. It agrees with Christianity in teaching that "whatsover a man soweth that shall he also reap." Like Christianity it aims at union with God, the Infinite Being. Its fundamental idea seems to be the persistent aspiration of the soul, through many successive stages of existence, after perfect accord with or repose in, the Eternal Being. That state of perfect accord and repose, termed by the Buddhist "Nirvana," is what the Christian means by heaven, or home, Says one writer:—"In the opinion of all thoughtful Buddhists, Nirvana is to be obtained only through struggle, self-denial. renunciation of worldly pleasures, release from selfish entanglements, abstemious living, holy aspiration, and a sweet trust in the illimitable, ineffable of the Universe. And it consists in the fruition of all hopes, the realisation of all enchanting dreams, the fulfillment of divine prophecies, the eternal becoming the fadeless glory of a conscious immortality." I am here reminded of many passages in the New Testament, especially in the Fourth Gospel, such as: "I am in the Father and the Father is in me' Peace I have with you, my peace I give unto you, not as the world giveth, give I unto you. In me ye might have peace: in the world ye shall have tribulation, but be of good cheer. I have overcome the world. And all mine are thine, and thine are mine. and I am glorified in them." And these sayings of the Apostle: "Your life is hid with Christ in God." "The peace of God which passeth all understanding shall keep your hearts and minds through Jesus Christ." The fundamental idea herein the same in the two religions; the difference is in the form of expression it takes in the case of each. In both are the elements of faith, trust and aspiration; and in both the final goal attained, after a long hard and patient struggle to subdue every kind of selfishness, is the sweet content and repose of the soul in harmony with the perfect goodness. And the conclusion to which I am led is this—that the Western mind and the Orinetal mind must be left each to understand and apply its religion in its own way, while education and all other elevating influences are freely and diligently used to raise the standard of thought and of intelligence and of life both in Buddhist and Christian lands.

The Chairman made some observations on the subject. The meeting was brought to a close with a vote of thanks to the Chairman and the lecturer.—The Hindu

Printed and Published by P. Carthigesa-Pillai for the Proprietors at the Saivaprakasa Yantra Office, Jaffna.